**கோமரன்கடவல பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 நவம்பர் 11 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோமரன்கடவல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பதிவேட்டின் பிரகாரம் நீதிமன்றத் தண்டப்பணம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,363,866 ஆக இருந்த போதிலும் அது ரூபா 532,225 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 831,641 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 40,072,096 பெறுமதியான 03 கணக்கு மீதிகளை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோப்பின் 59 ஆவது விதி | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய கைத்தொழில்கள் தொடர்பான பட்டியலான்று கணக்காய்வுத் திகதியான 2015 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | மாகாண நிதி விதி இலக்கம் 237 | வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை விஞ்சியிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 14,333 பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 08 வாகனங்கள் 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,613,663 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 224,055 ஆக இருந்தது.

முன்னைய ஆண்டினைவிட வருமான உதவி பெறுவனவுகள் ரூபா 5,118,201 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,389,608 இனால் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வாடகை | 1,083 | 598 | 485 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 90 | 59 | 31 |
| ஏனைய வருமானம் | 2,306 | 1,437 | 869 |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் கணிப்பிடப்பட்டு அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2014 சனவரி 08 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின்படி 03 வகையான பொருட்களை பழுதுபார்ப்பதற்கும், 13 வகையான பொருட்களை அகற்றுவதற்கும், 37 வகையான பொருட்களைள அழிப்பதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | - | 01 |
| இரண்டாம் நிலை | 15 | 10 | 05 |
| மூன்றாம் நிலை | 16 | 15 | 01 |
| மொத்தம் | 32 | 25 | 07 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் பதவியின் பணிப்பொறுப்புக்கள் பதிற்கடமை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2015 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) அபிவிருத்தி உத்தியோகத்தர், இயந்திர இயக்குனர் மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**3.3.1 கோமரன்கடவல குடிநீர் செயற்திட்டம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் குடிப்பதற்குப் பொருத்தமான குடிநீர் இல்லாமைக்கான தீர்வாக புறநெகும செயற்திட்டத்தின் கீழ் குடிநீர் செயற்திட்டமொன்றை மூன்று கட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்காக சபையினால் ரூபா 51,571,930 பெறுமதியான மூன்று உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொறியியலாளர் மாதிரிகளின் படி நிமிடமொன்றிற்கு 300 லீற்றர் இயலளவையுடைய தண்ணீர் பம்பியொன்றை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணத்தின் போது ஒப்பந்தக்காரர் நிமிடமொன்றிற்கு 100 லீற்றர் இயலளவையுடைய பம்பியொன்றையே பொருத்தியிருந்தார்.

(ஆ) 300 லீற்றர் இயலளவுடைய பம்பிக்காக ரூபா 175,000 மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவு செய்யும் பொது ஒப்பந்தக்காரருக்கு வேலை இலக்கம் 5.1 இன் பிரகாரம் நிமிடமொன்றிற்கு 100 லீற்றர் இயலளவுடைய பம்பிக்காக ரூபா 200,000 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைவான இயலளவையுடைய பம்பிக்காக கூடிய தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறப்பட்ட பிரகாரம் இயலளவு நிமிடமொன்றிற்கு 100 லீற்றர் பம்பியொன்று பொருத்தப்பட்டமையால் தாங்கியை நிரப்புவதற்காக 09 மணித்தியாலங்கள் செலவாகுவதுடன் மேலதிகமாக எடுக்கும் 06 மணித்தியால காலத்திற்காக பாரியளவில் மேலதிக மின்சக்தியொன்றை பயன்படுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஈ) நிமிடமொன்றிற்கு 100 லீற்றர் இயலளவுடைய பம்பியினால் தாங்கியை நிரப்புவதற்கு 09 மணித்தியாலங்கள் எடுத்த பின் பகிர்ந்தளிக்கும் போது அந்த தாங்கி ஒரு மணித்தியால காலத்தில் வெற்றிடமாவதனால் நுகர்வோருக்கு தொடர்ச்சியாக நீரை வழங்க முடியாதிருந்தது.

(உ) வீடுகளுக்கு வழங்குவதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனித்தனியாக நீர் வழங்கலை துண்டிக்கக்கூடிய உபகரணமான பெறுல் பொருத்தப்பட்டமையை உறுதிப்படுத்தி ரூபா 1,232,200 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த வேலைப்பகுதி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிர்மாணத்தை மேற்கொள்ளும் போது சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமையினால் நீர்த்தாங்கியை நிர்மாணிக்கும் இடம் மற்றும் உயர அளவு போதியளவான பிரகாரம் இனங்காணப்படாமையின் காரணமாக பிரதேசத்தில் 40 வீடுகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(எ) இந்த நீர் வழங்கும் செயற்திட்டத்திற்காக கிணற்றின் மூலம் நீரை பகிர்ந்தளிக்கும் செயற்பாடொன்று காணப்பட்ட போதிலும் நீரை சுத்திகரிக்கும் முறைமையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கிணறு தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது நீர் மண்ணிறமாக இருந்ததுடன் தாங்கியின் சுவரிலும் சுரங்கத்திலும் மண்டி நீரைக் காணக்கூடியதாக இருந்தது.

(ஏ) சுகாதாரமான பாதுகாப்பான குடிநீர் இல்லாமையின் காரணமாக இது வரையிலும் கோமவரன்கடவல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய 10 கிராம சேவகர் பிரிவில் மாத்திரம் 108 சிறுநீரக நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருந்தனர் ரூபா 45 மில்லியன் செலவிடப்பட்டிருந்த இந்த குடிநீர் செயற்திட்டத்திலிருந்து மக்கள் குடிப்பதற்குத் தகுதியான குடிநீரை போதியளவான பிரகாரம் தொடர்ச்சியாக குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் முடியாதிருந்தது.

(ஐ) 2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்தங்களினால் திருத்தப்பட்ட 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் ரூபா 22,236,200 தொகைக்குரிய செயற்தட்டத்தின் முதலாவது கட்டத்திற்காக நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 55,590 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3.2 பிரதேச சபை கட்டிட நிர்மாணம்**

---

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபையின் அலுவலகத்திற்காக இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 31,600,000 பெறுமதியில் 06 மாத காலத்திற்குள் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2012 திசெம்பர் 13 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2015 திசெம்பர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் கூரையின் இரண்டு பக்கங்களிலும் பிரதான இரண்டு மரக் கம்பங்களும் உடைந்து செல்வதன் காரணமாக கூரையில் அதன் இரண்டு பக்கங்களும் கீழிறங்கியிருந்ததுடன் அதனை சீரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கட்டிடத்தின் மேல்மாடியில் அமைந்துள்ள கூட்ட மண்டபம், ஆவணக் காப்பகம், பொதுமக்கள் கலரி போன்ற இடங்களில் மழைநீர் சிவிலின் ஊடாக உள்வருவதனால் அந்த மண்டபம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தனர். ஆவணக் காப்பகத்தில் காணப்பட்ட நிழற்படப் பிரதி இயந்திரம் மற்றும் கணனி இயந்திரம் என்பன நீரில் நனைந்தமையால் செயற்பாடற்ற நிலைக்கு உட்பட்டிருந்தது. கட்டிடத்தின் கூரையை அமைப்பதில் பொறியியலாளர் வடிவமைப்புத் திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக ஏற்பட்டிருந்த இந்த நிலைமையினால் கூரைக்காக செலுத்தப்பட்ட ரூபா 2,113,650 செலவினம் விளைவற்ற நிலைக்குள்ளாகியிருந்தது.

(இ) 2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்தங்களினால் திருத்தப்பட்ட 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் ரூபா 36,851,944 தொகைக்குரிய செயற்தட்டத்தின் முதலாவது கட்டத்திற்காக நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 92,130 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின் பாதீட்டு நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 52 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டது. அதன் படி வருடாந்த பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) மனித வள முகாமைத்துவம்